©
தமிழ்நாடு அரசு
2017

[Regd. No. TN/CCN/467/2012-14.
[R. Dis. No. 197/2009.
[விலை : ரூ. 2.40 காசு

# தமிழ்நாடு அரசிதழ்

ஆணையின்படி வெளியிடப்பட்டது.

எண் 36] சென்னை, புதன்கிழமை, செப்டம்பர் 6, 2017
ஆவணி 21, ஹேவிளம்பி, திருவள்ளுவர் ஆண்டு–2048

## பகுதி II—பிரிவு 2 இன் இணைப்பு

### அரசாங்க அறிவிப்புகளின் தமிழ் மொழிபெயர்ப்புகள்

**வேளாண்மைத் துறை**

**அறிவிக்கை**

*[அரசாணை (நிலை) எண் 156, வேளாண்மை (AP-2)த் துறை, 23 ஜூன் 2017.]*

1966ஆம் ஆண்டு விதைகள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 54/66) 11 ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், மேற்சொன்ன உட்பிரிவின் செயல் நோக்கங்களுக்காக பின்வரும் நபர்களை மேல்முறையீட்டு அதிகாரியாகக்கொண்ட குழுவினை இதனால் குறிப்பிடுகிறார்:–

1. விதைச்சான்றளிப்பு மற்றும் உயிரக சான்றளிப்பு இயக்குநர் கோயம்புத்தூர். — தலைவர்
2. எஸ். ராமநாதன்
த/பெ. சாம்பசிவம்,
தெற்கு வீதி, ஆலமங்குறிச்சி,
கும்பகோணம் வட்டம்,
தஞ்சாவூர் மாவட்டம்–612 303. — உறுப்பினர்
3. பி.வி. வெங்கடேசன்,
த/பெ. ஆர். வேலப்ப நாயக்கர்,
7/142, காணூர் புதூர், காணூர் அஞ்சல்,
செய்யூர் வழி, திருப்பூர்–641 655. — உறுப்பினர்

2. மேற்சொன்ன மேல்முறையீட்டு அதிகாரியின் பதவிக்காலம், ***தமிழ்நாடு அரசிதழில்*** இந்த அறிவிக்கை வெளியிடப்பட்ட நாளிலிருந்து மூன்று ஆண்டுகள் கால அளவிற்கு இருக்கும்.

**ககன் தீப் சிங் பேடி,**
*வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசு முதன்மைச் செயலர்.*

(தமிழாக்கம்)

**ந. அருள்,**
*இயக்குநர்,*
*தமிழ் வளர்ச்சி மற்றும்*
*செய்தி (மொழிபெயர்ப்பு)த் துறை.*

**வீட்டுவசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சித் துறை**

**அறிவிக்கைகள்**

*[அரசாணை (நிலை) எண் 68, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி (UD4(2)]த் துறை, 12 ஏப்ரல் 2017.]*

தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு நகர நாட்டுப்புற அமைப்புத் திட்டமிடல் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 35/1972) 10ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (b) பகுதியில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டும் 22–10–2014 ஆம் நாளிட்ட ***தமிழ்நாடு அரசிதழின்*** பாகம் II பிரிவு 2 இல் 705–706 ஆம் பக்கங்களில் (ஆங்கிலத்தில்) வெளியிடப்பட்ட II(2)/வீ.வ.ந.ப./622/2014 ஆம் எண் அறிவிக்கையை ரத்து செய்து விட்டு அதற்குப் பதிலாகவும், தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், கடலூர் உள்ளூர் திட்டமிடல் பகுதியில் கூடுதல் பகுதியினை சேர்ப்பதற்கும் 25–09–1974 ஆம் நாளிட்ட ***தமிழ்நாடு அரசிதழின்*** பாகம் II பிரிவு 2 இல் 496 ஆம் பக்கத்தில் (ஆங்கிலத்தில்) வெளியிடப்பட்ட ஊரகத் துறை மற்றும் உள்ளாட்சி நிருவாகத் துறையின் II(2)/RUL/4117/74 ஆம் எண் அறிவிக்கையில் பின்வரும் திருத்தத்தை செய்வதற்கான அவரது நோக்கத்தையும் இதனால் அறிவிக்கிறார்.

2. இந்த வரைவு அறிவிக்கை ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்பட்ட நாளிலிருந்து இரண்டு திங்கள் முடிவடையும் நாளன்று அல்லது அதற்கு பின்னர் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும் என்றும், இது தொடர்பாக மேற்சொன்ன உள்ளூர் பகுதியிலுள்ள யாதொரு குடிருப்பாளர் அல்லது யாதொரு உள்ளூர் அதிகாரி அல்லது நிறுவனத்திடமிருந்து மேற்சொன்ன கால அளவு முடிவடைவதற்கு முன்னர் மறுப்புரை அல்லது கருத்துரை ஏதேனும் வரப்பெற்றால் தமிழ்நாடு அரசு அதனை உரியவாறு கருதிப்பார்க்கும் என்றும் இதனால் அறிவிக்கப்படுகிறது மறுப்புரை அல்லது கருத்துரை ஏதேனுமிருப்பின், அதனை எழுத்துமூலமாக அரசு முதன்மைச் செயலாளர், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை தலைமைச் செயலகம், புனித ஜார்ஜ் கோட்டை சென்னை–600 009 என்ற முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

**ளநீவழுந்திலுந்பய்**

மேற்சொன்ன அறிவிக்கையில் "அட்டவணை" என்பதற்குப் பதிலாக பின்வரும் "அட்டவணை" அமைத்துக் கொள்ளப்பட வேண்டும் அதாவது:–

**இண்தளநீந**

| *தொடர் எண்* | *உள்ளூர் திட்டமிடல் பகுதியின் பெயர்* | *வருவாய் கிராமங்களின் எண்ணும் பெயர்களும்* | |
|---|---|---|---|
| *(1)* | *(2)* | *(3)* | |
| 1 | கடலூர் | கடலூர் வட்டம் | |
| | | 1. | மேல் குப்பம் |
| | | 2. | நல்லாத்தூர் |
| | | 3. | தூக்கணாம்பாக்கம் |
| | | 4. | தென்னம்பாக்கம் |
| | | 5. | செல்லஞ்சேரி |
| | | 6. | கீழ் குமாரமங்கலம் |
| | | 7. | ஒடலப்பட்டு |
| | | 8. | புதுக்கடை |
| | | 9. | வடபுரம் (கீழ்பாதி) |
| | | 10. | கிளிஞ்சிக்குப்பம் |
| | | 11. | சிங்காரக்குடி மற்றும் |
| | | 11/2. | நல்லவடு |
| | | 12. | மதலப்பட்டு |
| | | 13. | கீழ் அழிஞ்சிப்பட்டு |
| | | 14. | மேல் அழிஞ்சிப்பட்டு |
| | | 15. | நாகபபனூர் |
| | | 16. | காரணப்பட்டு |
| | | 17. | பள்ளிப்பட்டு |
| | | 18. | மலைப்பெருமாளகரம் |
| | | 19. | உள்ளேரிப்பட்டு |
| | | 20. | கரைமேடு |
| | | 21. | திருப்பணாம்பாக்கம் |
| | | 22. | களையூர் |
| | | 23. | இரண்டாயிர விளாகம் |
| | | 24. | அழகியநத்தம் |
| | | 25. | வெள்ளப்பாக்கம் |
| | | 26. | மருதாடு |
| | | 27. | நத்தப்பட்டு |
| | | 28. | வெளி செம்மண்டலம் |
| | | 29. | வில்வராயநத்தம் |

| *தொடர் எண்* | *உள்ளூர் திட்டமிடல் பகுதியின் பெயர்* | *வருவாய் கிராமங்களின் எண்ணும் பெயர்களும்* | |
|---|---|---|---|
| *(1)* | *(2)* | *(3)* | |
| | | 30. | உதாரமாணிக்கம் |
| | | 31. | பெரிய கங்கணாங்குப்பம் |
| | | 32. | சின்ன கங்கணாங்குப்பம் |
| | | 33. | உச்சிமேடு |
| | | 34. | சுபாவுப்பலவாடி |
| | | 35. | குண்டுவுப்பலவாடி |
| | | 36. | மஞ்சக்குப்பம் |
| | | 37. | தேவனாம்பட்டணம் |
| | | 38. | வன்னியர்பாளையம் |
| | | 39. | செல்லங்குப்பம் |
| | | 40. | திருப்பாப்புலியூர் |
| | | 41. | கூத்தப்பாக்கம் |
| | | 42. | கொண்டூர் |
| | | 43. | தோட்டப்பட்டு |
| | | 44. | செங்சிகுமாரபுரம் |
| | | 45. | வாரகால்பட்டு |
| | | 46. | காராமணிக்குப்பம் |
| | | 47. | கோணமங்கலம் |
| | | 48. | பில்லாளி |
| | | 49. | ஓட்டேரி |
| | | 50. | திருமாணிக்குழி |
| | | 51. | வானமாதேவி |
| | | 52. | விலங்கல்பட்டு |
| | | 53. | நடுவீரப்பட்டு |
| | | 54. | சென்னப்பநாயக்கன் பாளையம் |
| | | 55. | வெள்ளக்கரை |
| | | 56. | ராமாபுரம் |
| | | 57. | மாவாடிப்பாளையம் |
| | | 58. | திருவேந்திபுரம் |
| | | 59. | குமாரப்பேட்டை |
| | | 60. | பாதிரிக்குப்பம் |
| | | 61. | கருப்படித்துண்டு |
| | | 62. | கரையேரவிட்ட குப்பம் |
| | | 63. | அரிசிபெரியாங்குப்பம் |

| தொடர் எண் | உள்ளூர் திட்டமிடல் பகுதியின் பெயர் | வருவாய் கிராமங்களின் எண்ணும் பெயர்களும் |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1 | கடலூர் | கடலூர் வட்டம் |
| | | 64. வெட்டுக்குளம் |
| | | 65. கடலூர் O.T. |
| | | 66. பொன்னியான்குப்பம் |
| | | 67. பச்சையான்குப்பம் |
| | | 68. குடிக்காடு |
| | | 69. காரைக்காடு |
| | | 70. சேடப்பாளையம் |
| | | 71. அன்னவல்லி |
| | | 72. கங்கமநாய்க்கன் குப்பம் |
| | | 73. தொண்டமநத்தம் |
| | | 74. செம்பங்குப்பம் |
| | | 75. தியாகவல்லி |
| | | 77. கோதண்டராமபுரம் |

**தர்மேந்திர பிரதாப் யாதவ்,**
*அரசு முதன்மை செயலாளர்.*

(தமிழாக்கம்)

**ந. அருள்,**
*இயக்குநர்,*
*தமிழ் வளர்ச்சி மற்றும்*
*செய்தி (மொழிபெயர்ப்பு)த் துறை.*

*[அரசாணை (நிலை) எண்.96, வீட்டுவசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சி (UD4(2)]த் துறை, 29 மே 2017.]*

தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு நகர நாட்டுப்புற அமைப்புத் திட்டமிடல் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 35/1972) 10 ஆம் பிரிவைச் சேர்ந்த (4) உட்பிரிவின் (c) பகுதியில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், 06–06–1979 ஆம் நாளிட்ட ***தமிழ்நாடு அரசிதழின்*** பாகம் II பிரிவு 2 இல் 295 ஆம் பக்கத்தில் (ஆங்கிலத்தில்) வெளியிடப்பட்ட வீட்டுவசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்சித் துறையின் II(2)/HOU/3317/79 ஆம் எண் அறிவிக்கையில் பின்வரும் திருத்தத்தை இதனால் செய்கிறார். இந்த நோக்கத்திற்காக இது மேற்சொன்ன சட்டத்தின் 10 ஆம் பிரிவின் (1) உட்பிரிவின் (c) பகுதியில் கோரியுள்ளவாறு முன்னரே வெளியிடப்பட்டுள்ளது.

**திருத்தம்**

மேற்சொன்ன அறிவிக்கையில், "அட்டவணை"க்கு பதிலாக, பின்வரும் "அட்டவணை" அமைத்துக்கொள்ளப்பட வேண்டும், அதாவது;–

**"அட்டவணை"**

| தொடர் எண் | உள்ளூர் அமைப்புத் திட்டப் பகுதியின் பெயர் | வருவாய் கிராமத்தின் எண் மற்றும் பெயர் |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | | 103 சென்னாத்தூர் |
| | | 102 ஒசூர் |
| | | 87 ஜீஜீவாடி |
| | | 28 பேகப்பள்ளி |
| | | 30 நல்லூர் |
| | | 88 மூக்கோண்டப்பள்ளி |
| | | 90 கொத்தகொண்டபள்ளி |
| | | 89 மொதம் அகரஹாரம் |
| | | 92 மத்திகிரி |
| | | 99 ஒன்னலவாடி |
| | | 98 அச்செட்டிப்பள்ளி |
| | | 93 நாகொண்டபள்ளி |
| | | 91 பூனப்பள்ளி |
| | | 80 ஆவலப்பள்ளி |
| | | 26 சொக்கநாதபுரம் |
| | | 27 குஸ்தானபள்ளி |
| | | 25 கோட்டப்பள்ளி |
| | | 01 சேவகானபள்ளி |
| | | 02 காகனூர் |
| | | 03 சொக்கரசன்பள்ளி |
| | | 04 கொடியாளம் |
| | | 05 சிங்கசாதனபள்ளி |
| | | 06 பெலத்தூர் |
| | | 07 தின்னபள்ளி |
| | | 19 கதிர்கானதிண்ணா |
| | | 20 ஜோகிகலாசமனப்பள்ளி |
| | | 21 லிங்காபுரம் |
| | | 22 ஒட்டப்பள்ளிதின்னா |
| | | 23 பாகலூர் |
| | | 24 ஈச்செங்கூர் |
| | | 32 மூர்த்திகானதிண்ணா |
| | | 31 ஜீமங்கலம் |
| | | 82 எலுவப்பள்ளி |
| | | 81 காளஹஸ்திபுரம் |

| தொடர் எண் | உள்ளூர் அமைப்புத் திட்டப் பகுதியின் பெயர் | வருவாய் கிராமத்தின் எண் மற்றும் பெயர் | | தொடர் எண் | உள்ளூர் அமைப்புத் திட்டப் பகுதியின் பெயர் | வருவாய் கிராமத்தின் எண் மற்றும் பெயர் | |
|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | | (1) | (2) | (3) | |
| | | 83 | விஷ்வநாதபுரம் | | | 38 | அமுதுகொண்டபள்ளி |
| | | 106 | புகைந்தொத்தி | | | 39 | திம்மசந்திரம் |
| | | 107 | காரிபாசனபுரம் | | | 40 | வானமங்களம் |
| | | 108 | பெத்தகுல்லூ | | | 41 | கட்டிநாய்க்கன்தொட்டி |
| | | 109 | சின்னகுல்லூ | | | 42 | பேரிகை |
| | | 110 | கெலவரபள்ளி | | | 69 | அத்தி முகம் |
| | | 111 | தட்டகானப்பள்ளி | | | 70 | மிடிதேபள்ளி |
| | | 79 | மாரச்சந்திரம் | | | 71 | நாரிகானபுரம் |
| | | 77 | கெம்பாசந்திரம் | | | 72 | கொலதாசபுரம் |
| | | 33 | கனிமங்கலம் | | | 73/ | 1,2,3 நந்திமங்கலம் |
| | | 34 | தும்மனப்பள்ளி | | | 74 | ஆத்தூர் |
| | | 29 | கள்ளி அக்ரஹாரம் | | | 75 | படதேப்பள்ளி |
| | | 86 | அனுமேபள்ளி | | | 76 | நஞ்சாபுரம் |
| | | 85 | கோவிந்தா அக்ரஹாரம் | | | 78 | கள்ளிபுரம் |
| | | 84 | சாந்தபுரம் அக்ரஹாரம் | | | 94 | முத்துகானப்பள்ளி |
| | | 101 | நல்லிகாபெட்டம் அக்ரஹாரம் | | | 95 | பஞ்சாஷிபுரம் |
| | | | | | | 96 | மூகளூர் |
| | | 104 | தொரப்பள்ளி அக்ரஹாரம் | | | 97 | கோபனப்பள்ளி |
| | | 100 | ரங்கபண்டிகா அக்ரஹாரம் | | | 112 | சித்தனபள்ளி |
| | | 117 | ஆலூர் | | | 113 | காருப்பள்ளி |
| | | 105 | மோரனபள்ளி | | | 114 | படமுத்தலை |
| | | 8 | போபாலபுளுரம் | | | 115 | முத்தாளி |
| | | 9 | தேவரிபள்ளி | | | 116 | ஆத்தூர் |
| | | 10 | பாலிகானபள்ளி | | | 117/1 | ஆலூர் காப்புவனம் |
| | | 11 | இடிபள்ளி | | | 117/2 | ஆலூர் |
| | | 12 | புரம் | | | 118 | பஸ்தாலப்பள்ளி |
| | | 13 | ஆலூர் | | | 119 | அடுவனப்பள்ளி |
| | | 14 | வட்டிரிப்பள்ளி | | | 120 | பலவனப்பள்ளி |
| | | 15 | ஒட்டபள்ளி | | | 121 | சூடகொண்டபள்ளி |
| | | 16 | அலசாபள்ளி | | | 122 | ஆலேநத்தம் |
| | | 17 | பிச்சுகொண்டபள்ளி | | | 123 | வெங்கடேசபுரம் |
| | | 18 | முதுகானபள்ளி | | | 124 | புக்கசாகரம் |
| | | 35 | பட்டவாரப்பள்ளி | | | 125 | அட்டகுறுக்கி |
| | | 36 | மல்லசந்திரம் | | | 126 | காமந்தொட்டி |
| | | 37 | முகலாபள்ளி | | | 127 | சுப்பாகிரி |

| தொடர் எண் | உள்ளூர் அமைப்புத் திட்டப் பகுதியின் பெயர் | வருவாய் கிராமத்தின் எண் மற்றும் பெயர் |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | | 128 படகோட்டா |
| | | 129 சானமாவு |
| | | 130 தியாரனதுர்க்கம் |
| | | 131 துப்புகானபள்ளி |
| | | 137 தோரிப்பள்ளி |
| | | 200 சானமாவு காப்புவனம் |
| | | 201 சானமாவு காப்புவனம் |
| | **தேன்கனிக்கோட்டை வட்டம்** | |
| | | 7 பெலகொண்டப்பள்ளி |
| | | 6 கொமரனபள்ளி |
| | | 4 சாத்தனூர் |
| | | 5 கெம்பட்டி |
| | | 8 கலுகொண்டப்பள்ளி |
| | | 9 பெத்தமதகொண்டபள்ளி |
| | | 10 தேவகானப்பள்ளி |
| | | 11 மதகொண்டப்பள்ளி |
| | | 12 சரகாபள்ளி |
| | | 13 கொடியாலம் |
| | | 14 தொகரை அக்ரஹாரம் |
| | | 53 தண்டரை |
| | | 57 ஆனேகொல்லூ |
| | | 58 ஜாகிர்காருபள்ளி |
| | | 59 நாகப்பன் அக்ரஹாரம் |
| | | 60 ஹொசபுரம் |
| | | 61 கெலமங்கலம் |
| | | 62 குந்துமாரனபள்ளி |
| | | 63 பைரமங்கலம் |
| | | 64 போடிச்சிபள்ளி |

**தர்மேந்திர பிரதாப் யாதவ்,**
*அரசு செயலர்.*

(தமிழாக்கம்)

**ந. அருள்,**
*இயக்குநர்,*
*தமிழ் வளர்ச்சி மற்றும்*
*செய்தி (மொழிபெயர்ப்பு)த் துறை.*

## தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை

## அறிவிக்கைகள்

*[அரசாணை (நிலை) எண் 80, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (J2)த் துறை 26 ஏப்ரல் 2017.]*

**1948** ஆம் ஆண்டு குறைந்தளவு ஊதியங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் **11/1948**) விவர அட்டவணையின் பாகம் **1**–இல், கீழ்காணும் திருத்தத்தை செய்யக் கருதியிருப்பது பற்றி தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், இதனால் அறிவிப்பு செய்கிறார் அறிவிக்கையின் கீழ்காணும் வரைவு, மேற்சொன்ன சட்டத்தின் 27 ஆம் பிரிவில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு வெளியிடக் கருதப்பட்டுள்ளது.

**2.** செய்யக்கருதியுள்ள திருத்தம் தொடர்பாக, இந்த அறிவிக்கை, ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் நாளிலிருந்து மூன்று திங்கள் கால அளவு முடிவடையும் நாளன்று அல்லது அதற்கு முன்னர் எவரிடமிருந்தேனும் வரப்பெறுகிற மறுப்புரை அல்லது கருத்துரை தமிழ்நாடு அரசால் பரிசீலிக்கப்படும் மறுப்புரை அல்லது கருத்துரை ஏதேனுமிருப்பின், அவற்றை சென்னை–600 006–இல் உள்ள தொழிலாளர் நல ஆணையாளர் மூலமாக அரசு செயலாளர் தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை தலைமைச் செயலகம், சென்னை–600 009 என்ற முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

### வரைவு அறிவிக்கை

**1948** ஆம் ஆண்டு குறைந்தளவு ஊதியங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் **11/1948**) **27**ஆம் பிரிவில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், மேற்சொன்ன சட்டத்தின் விவர அட்டவணையின் பகுதி I–இல், பின்வரும் திருத்தத்தை இதனால் செய்கிறார்.

### திருத்தம்

மேற்சொன்ன விவர அட்டவணையில் பகுதி **1**–இல் "87 டைமெக்சன் தொழிற்சாலையில் வேலைவாய்ப்பு" என்ற சொற்றொடருக்குப் பதிலாக. "87 வைரத்தை வெட்டுதல் மற்றும் மெருகேற்றுதல் தொழிற்சாலையில் வேலைவாய்ப்பு என்ற சொற்றொடர் அமைத்துக்கொள்ளப்பட வேண்டும்.

**பெ. அமுதா,**
*அரசுச் செயலாளர்.*

(தமிழாக்கம்)

**ந. அருள்,**
*இயக்குநர்*
*தமிழ் வளர்ச்சி மற்றும்*
*செய்தி(மொழிபெயர்ப்பு)த் துறை.*

*[அரசாணை (நிலை) எண் 84, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (J2)த் துறை 28 ஏப்ரல் 2017.]*

**1948** ஆம் ஆண்டு குறைந்தளவு ஊதியங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் **11/1948**) **5**–ஆம் பிரிவைச் சேர்ந்த **(1)** உட்பிரிவின் (a) பகுதி மற்றும் **9**ஆம் பிரிவில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், **08–07–2015**ஆம் நாளிட்ட ***தமிழ்நாடு அரசிதழின்*** பாகம் II பிரிவு **2**–ல் **466**ஆம் பக்கத்தில் வெளியிடப்பட்ட தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறையின் II(2)/தொ.வே.வா/373/2015ஆம் எண் அறிவிக்கையில் பின்வரும் திருத்தங்களை இதனால் செய்கிறார்.

### திருத்தம்

மேற்சொன்ன அறிவிக்கையில், "வேலையளிப்பவரின் பிரதிநிதிகள்" என்ற தலைப்பின் கீழ் உள்ள "**(1)** திரு. எ.ராமு, தலைவர், நீலகிரி பாட் லீப் மேனுபேக்சரர்ஸ் அசோசியேஷன், **2/217**, அரவேனு அஞ்சல், நீலகிரி", என்ற சொற்றொடருக்கு பதிலாக "**(1)** திரு. எச்.பி. ஆனந்தன், தலைவர், நீலகிரி சிறு தேயிலை விவசாயிகள் சங்கம், **2/104**, எல்லடா (Eelada), கொடநாடு அஞ்சல், நீலகிரி" என்ற சொற்றொடர் அமைத்துக்கொள்ளப்பட வேண்டும்.

**பெ. அமுதா,**
*அரசுச் செயலாளர்.*

(தமிழாக்கம்)

**ந. அருள்,**
*இயக்குநர்.*
*தமிழ் வளர்ச்சி மற்றும்*
*செய்தி(மொழிபெயர்ப்பு)த் துறை.*

*[அரசாணை (2D) எண் 28, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (J1)த் துறை 2 மே 2017.]*

1948 ஆம் ஆண்டு குறைந்த அளவு ஊதியங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 11/1948) 3ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (a) பகுதி மற்றும் 5ஆம் பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், 23–11–2016ஆம் நாளிட்ட ***தமிழ்நாடு அரசிதழின்*** பாகம் II, பிரிவு–2 இல் 682–684 வரையிலான பக்கங்களில் (ஆங்கிலத்தில்) வெளியிடப்பட்ட தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறையின் II(2)/தொ.வே.வா./770/2016 ஆம் எண் அறிவிக்கையில் பின்வரும் திருத்தத்தை இதனால் செய்கிறார்.

**திருத்தம்**

மேற்சொன்ன அறிவிக்கையில், ''விளக்கம்'' என்ற தலைப்பின் கீழ் பின்வரும் பத்தி சேர்த்துக் கொள்ளப்பட வேண்டும் அதாவது:–

''மண்டலங்களின் வகைப்பாடு மண்டலம் A, B மற்றும் C ஆகியவை பின்வரும் பகுதிகளைக் கொண்டிருக்கும்:–

மண்டலம்–A அனைத்து மாநகராட்சிகளும் அடங்கும்

மண்டலம்–B அனைத்து நகராட்சிகளும் அடங்கும்

மண்டலம்–C மண்டலம்–A மற்றும் மண்டலம்–B இல் உள்ள இடங்கள் நீங்கலாக அனைத்து இடங்களும் அடங்கும்.

**பெ. அமுதா,**
*அரசுச் செயலாளர்.*

(தமிழாக்கம்)

**ந. அருள்,**
*இயக்குநர்*
*தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி (மொழிபெயர்ப்பு)த் துறை.*

*[அரசாணை (2D) எண் 36, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (J1)த் துறை 02 ஜூன் 2017.]*

1948 ஆம் ஆண்டு குறைந்த அளவு ஊதியங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 11/1948) 3ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (b) பகுதி 5ஆம் பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவில் ஆகியவற்றில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டும், 13–09–2012 ஆம் நாளிட்ட ***தமிழ்நாடு அரசிதழின்*** பாகம் II, பிரிவு – 2 இல் 1 மற்றும் 2 ஆம் பக்கங்களில் (ஆங்கிலத்தில்) – வெளியிடப்பட்ட II(2)தொ.வே.வா/597/(a)/2012ஆம் எண்ணுள்ள தொழிலாளர்–வேலைவாய்ப்புத் துறையின் அறிவிக்கையை ரத்து செய்துவிட்டு, அதற்குப் பதிலாகவும், தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், ஆலோசனைக்குழுவுடன் கலந்தாலோசித்த பின்னர், கீழேயுள்ள விவர அட்டவணையின் நெடும்பத்தி (2) இல் குறிப்பிடப்பட்டுள்ள புகையிலை தயாரிப்புத் (பீடி சுற்றுதல் நீங்கலாக பீடி தயாரித்தல் உட்பட), தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களுக்கு வழங்கத்தக்க குறைந்தளவு ஊதிய வீதங்களை, அந்த விவர அட்டவணையின் (3) நெடும்பத்தியின் நிகரான பதிவுகளில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு இதனால் திருத்தியமைக்கிறார்.

இந்த அறிவிக்கை 15–08–2015 ஆம் நாளன்று செயலுக்கு வரும்

**விவர அட்டவணை**

**புகையிலை தயாரிப்புத் (பீடி தயாரிப்பு உட்பட சுற்றுதல்) தொழிலில் வேலைவாய்ப்பு**

| *தொடர் எண்* | *பணியின் வகைகள்* | *குறைந்தளவு அடிப்படை ஊதிய வீதங்கள்* |
|---|---|---|
| | | *(ரூ. காசு)* |
| *(1)* | *(2)* | *(3)* |
| (1) | அளவைப் பொருட்படுத்தாது 1000 ஜாடி பீடிகள் சுற்றுவதற்கு | 107.00 |
| (2) | அளவைப்பொருட்படுத்தாது 1000சாதா பீடிகள் சுற்றுவதற்கு (முக்கூடல் வகை பீடிகள் உட்பட) | 106.80 |

**விளக்கங்கள்:**

(1) மேற்சொன்ன வீதங்களில் மிகை ஊதியம் என்ற வகையில் வழங்கப்படும் எதுவும் சேர்க்கப்படகூடாது

(2) அகவிலைப்படி: மேலே நிர்ணயிக்கப்பட்ட குறைந்தளவு அடிப்படை ஊதியங்களுடன் தொழிலாளர்களுக்கு கீழே குறிப்பிடப்படுள்ளவாறு அகவிலைப்பு வழ்ங்கப்பட வேண்டும்:–

(i) அகவிலைப்படியானது, 2008 ஆம் ஆண்டிற்கான சென்னை மாநகர நுகர்வோர் சராசரி விலைக்குறியீட்டு எண்ணுடன் இணைக்கப்பட்டுள்ளது (அதாவது 1960 ஆம் ஆண்டில் 100 புள்ளிகள் என்பதை அடிப்படையாகக் கொண்டு 3384 புள்ளிகள். இனிவருங்காலங்களில் 3384 புள்ளிகளுக்கு மேல் உயரும் ஒவ்வொரு புள்ளிக்கும் ஒவ்வொரு 1000 பீடிகளுக்கு 3 காசுகள் (மூன்று காசுகள் மட்டும்) கூடுதலாக அகவிலைப்படியாக வழங்கப்பட வேண்டும்.

(ii) முந்தைய 12 மாதங்களுக்கான (அதாவது ஜனவரியிலிருந்து டிசம்பர் வரை) சராசரி விலைக் குறியீட்டினை அடிப்படையாகக் கொண்டு, ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் முதல் நாளிலிருந்து அகவிலைப்படி கணக்கிடப்படவேண்டும்.

(3) தற்போது வழங்கப்பட்டு வரும் ஊதியங்கள், இங்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள குறைந்தளவு ஊதியங்களைக் காட்டிலும் அதிகமாக இருக்குமிடங்களிளெல்லாம் அதே ஊதியம் தொடர்ந்து வழகப்பட வேண்டும்.

(4) பணியின் தன்மை ஒரே மாதிரியாக இருக்கும்போது, ஆண் மற்றும் பெண் தொழிலாளர்களுக்கு வழங்கப்படும் ஊதியத்தில் எவ்வித வேறுபாடும் இருக்கக்கூடாது.

**பெ. அமுதா,**
*அரசுச் செயலாளர்.*

(தமிழாக்கம்)

**ந. அருள்,**
*இயக்குநர்*
*தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி (மொழிபெயர்ப்பு)த் துறை.*

தமிழ்நாடு அரசுக்காக சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை இயக்குநரால் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.